# வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் மாதாந்த பொதுக்கூட்ட அறிக்கை
# பெப்ரவரி 2022.02.17

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டின் பெப்ரவரி மாதத்திற்கான மாதாந்த பொதுக்கூட்டம் கௌரவ தவிசாளர் சோமசுந்தரம் சுகிர்தன் தலைமையில் 2022.02.17 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 09.37 மணிக்கு தலைமையலுவலக சபா மண்டபத்தில் ஒரு நிமிட அக வணக்கத்துடன் ஆரம்பமானது. அவ்வேளை கீழ்க்காணும் அங்கத்தவர்கள் சமூகமாகியிருந்தனர்.

1. கௌரவ உறுப்பினர் நாகலிங்கம் இரத்தினபூபதி
2. கௌரவ உறுப்பினர் சுப்பையா பத்மநாதன்
3. கௌரவ உறுப்பினர் சந்திரகுமார் ரஜனிதேவி
4. கௌரவ உறுப்பினர் பசுபதி யோகராசா
5. கௌரவ உறுப்பினர் எட்மன் தயாவதி
6. கௌரவ உறுப்பினர் பாக்கியநாதர் மரியதாஸ்
7. கௌரவ உறுப்பினர் இராமன் சேனாதிராசா
8. கௌரவ உறுப்பினர் டானியேல் அந்தோனிப்பிள்ளை
9. கௌரவ உறுப்பினர் மேரி ஆன் சகாயராணி குவேந்திரராசா
10. கௌரவ உறுப்பினர் சின்னத்தம்பி ஜெயரத்தினம்
11. கௌரவ உறுப்பினர் கந்தையா ஜினதாஸ்
12. கௌரவ உறுப்பினர் இராசரத்தினம் ஜெயபாலசிங்கம்
13. கௌரவ உறுப்பினர் சரவணமுத்து தனபாலசிங்கம்
14. கௌரவ உறுப்பினர் பொன்னுத்துரை தங்கராசா
15. கௌரவ உறுப்பினர் அனுஸாவதி இதயதாஸ்
16. கௌரவ உறுப்பினர் சிவகுமாரன் செந்தூரன்
17. கௌரவ உறுப்பினர் சண்முகவடிவேல் செல்லகாந்தன்
18. கௌரவ உறுப்பினர் இராசரத்தினம் ஸ்ரீதாமோதரராசா
19. கௌரவ உறுப்பினர் சுப்பிரமணியம் சர்வேஸ்வரன்
20. கௌரவ உபதவிசாளர் பொன்னம்பலம் இராசேந்திரம்
21. கௌரவ உறுப்பினர் பிறேமலதா பாஸ்கரன்
22. கௌரவ உறுப்பினர் சொக்கலிங்கம் சபேசன்
23. கௌரவ உறுப்பினர் மார்க்கண்டு மகாதேவா
24. கௌரவ உறுப்பினர் ஐயாத்துரை மயூரன்

- ❖ கௌரவ தவிசாளர் அவர்கள் தனது தலைமை உரையிலே இன்றைய 46 வது கூட்டத்திற்கு வருகை தந்திருக்கின்ற கௌரவ உப தவிசாளர், கௌரவ உறுப்பினர்கள், சபையின் செயலாளர், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள் அனைவரையும் வரவேற்று தனது காலை வணக்கத்தை தெரிவித்துக் கொண்டார்.

- ❖ கௌரவ உறுப்பினர் செல்லத்துரை கமலநாதன் அவர்கள் காலை 09.39 மணிக்கு வருகை தந்தார்.

- ❖ தொடர்ந்து கௌரவ உறுப்பினர்களான தாயுமானவர் நிகேதன், சுபாஸ்கரன் சந்திரமதி, ஆகியோர் சுகயீனம் காரணமாகவும், கௌரவ உறுப்பினர் சசிகலாதேவி ரவி அவர்கள் தனிப்பட்ட தேவை காரணமாகவும் கூட்டத்திற்கு சமூகமளிக்க முடியாதுள்ளதாக அறியத் தந்துள்ளார்கள் எனக் கூறி அவர்களது விடுமுறைகளினை அனுமதிப்பதற்கு கௌரவ தவிசாளர் சபைக்குச் சமர்ப்பித்தார்.

- ❖ கௌரவ உறுப்பினர்களான தாயுமானவர் நிகேதன், சுபாஸ்கரன் சந்திரமதி, சசிகலாதேவி ரவி ஆகியோரின் விடுமுறையினை அனுமதிக்கலாமென கௌரவ உறுப்பினர் பாக்கியநாதர் மரியதாஸ் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் பசுபதி யோகராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

- தொடர்ந்து கௌரவ தவிசாளர் அவர்கள் தனது தலைமையுரையிலே புதிய ஆண்டிலே கொவிட்-19 தொற்றுநோய் சூழ்நிலையிலும் சபையின் செயற்பாடுகள் சிறப்பாக இடம்பெற ஒத்துழைப்பு வழங்கிய கௌரவ உபதவிசாளர், கௌரவ உறுப்பினர்கள், செயலாளர், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்கு நன்றி தெரிவித்தார். சுற்றுலாப்பயணிகளின் வருகை அதிகரித்து வருகின்றமையால் கீரிமலைப் பகுதிக்கு இரவுநேர காவலாளி ஒருவரை நியமிக்க வேண்டிய தேவை உள்ளது. மேலும் தற்போது வட்டார ரீதியாக அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களை சபை உறுப்பினர்களுக்கு அறிமுகம் செய்து வைக்க வேண்டிய தேவையும் உள்ளது எனத் தெரிவித்தார்.

  ❖ கௌரவ உறுப்பினர்களான சேனாதிராசா கலையமுதன், கந்தசாமி மயூரதன் ஆகியோர் காலை 09.43 மணிக்கு வருகை தந்தனர்.

  - தொடர்ந்து நிகழ்ச்சி நிரல் அடிப்படையில் 20.01.2022 ஆம் திகதி நடைபெற்ற மாதாந்த பொதுக்கூட்ட வரைபு அறிக்கையை அங்கீகரிக்குமாறு கௌரவ தவிசாளர் அவர்களினால் கோரப்பட்டது.

- ஜனவரி மாதம் 20.01.2022 ஆம் திகதி நடைபெற்ற மாதாந்த பொதுக்கூட்ட வரைபு அறிக்கை சரியென கௌரவ உறுப்பினர் டானியேல் அந்தோனிப்பிள்ளை அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் மார்க்கண்டு மகாதேவா அவர்கள் வழிமொழிய் சபையால் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

➢ அடுத்து 25.01.2022, 07.02.2022, 10.02.2022 ஆம் திகதிகளில் நடைபெற்ற நிதிக்குழுக் கூட்டங்களின் சிபாரிசிற்கமைய கொடுப்பனவுகள் விபரம் அனுமதிக்காக கௌரவ தவிசாளர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது.

| இல | பெயர் | விபரம் | தொகை |
|---|---|---|---|
| 01 | World Construction, Mavady, Moolai Road, Vaddukoddai | சபைநிதி 2021 மூலம் மேற்கொள்ளப்பட்ட Reconstruction of Nakkanawaththai Road- Alaveddy West வேலைக்கான முதலாவதும் இறுதியுமான கொடுப்பனவு | Rs 2,188,080.00 |
| 02 | World Construction, Mavady, Moolai Road, Vaddukoddai | சபைநிதி 2021 மூலம் மேற்கொள்ளப்பட்ட Renovation of Savakkalai Veethy- Seenthippantal Ilavalai North வேலைக்கான முதலாவதும் இறுதியுமான கொடுப்பனவு | Rs 1,708,250.00 |
| 03 | Vigadar Civil Contractor, Manikkam Vairavar Kovilady, Chulipuram East, Chulipuram | சபைநிதி (அபிவிருத்தி ஒதுக்கம்) மூலம் மேற்கொள்ளப்பட்ட Reconstruction of Thenmayilai Cross Road வேலைக்கான முதலாவதும் இறுதியுமான கொடுப்பனவு | Rs 1,100,000.00 |
| 04 | Nami Construction, Dutch Road, Meesalai West, Chavakachcheri | சபைநிதி (அபிவிருத்தி ஒதுக்கம்) மூலம் மேற்கொள்ளப்பட்ட Reconstruction of Alayaveethy Cross Lane, Kankesanthurai வேலைக்கான முதலாவதும் இறுதியுமான கொடுப்பனவு | Rs 1,589,844.00 |
| 05 | Athy Myliddy Community Center, Athy Myliddy, Kankesanthurai | சபைநிதி (அபிவிருத்தி ஒதுக்கம்) மூலம் மேற்கொள்ளப்பட்ட Reconstruction of Poothavarajar Kovil Veethy வேலைக்கான முதலாவதும் இறுதியுமான கொடுப்பனவு | Rs 408,555.80 |
| 06 | பன்னாலை கணேசா சனசமூக நிலையம், தெல்லிப்பளை | PSDG-2021 மூலம் மேற்கொள்ளப்பட்ட Keerimalai Kerny St IV வேலைக்கான கொடுப்பனவு | Rs 2,075,275.00 |
| 07 | வித்தகன் சனசமூக நிலையம், தெல்லிப்பளை | PSDG-2021 மூலம் மேற்கொள்ளப்பட்ட Keerimalai Kerny St II வேலைக்கான கொடுப்பனவை முற்பணமாக வழங்கல் | Rs 1,114,618.67 |
| 08 | Namagal Community Center, Namagal Road, Thellippalai. | சபைநிதி மூலம் மேற்கொள்ளப்பட்ட Reconstruction of Vellavaikkal Veethy, Thanthaiselvapuram வேலைக்கான முதலாவதும் இறுதியுமான கொடுப்பனவு | Rs 136,000.00 |
| 09 | SP Engineering, Vaddu South, Vaddukoddai. | சபைநிதி 2021 மூலம் மேற்கொள்ளப்பட்ட Reconstruction of Mulavai Cross Road, Myliddy வேலைக்கான முதலாவதும் இறுதியுமான கொடுப்பனவு | Rs 1,202,660.00 |
| 10 | Abans PLC, Chunnakam | LG 18BTU Air Conditioner கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 193,990.00 |
| 11 | Selva Electricals, Palaly Rd, Thirunelvely | மயிலிட்டி உப அலுவலகத்திற்கு இலத்திரனியல் பொருட்கள் கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 186,188.00 |

| | | | |
|---|---|---|---|
| 12 | RK Electricals, KKS Road, Mallakam | Bulb, Sensor கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 212,000.00 |
| 13 | Jana Civil Work, Imayanan, Uduppiddy | பிரதேச அபிவிருத்தி உதவித்திட்டத்தின் கீழ் 2021 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும் சந்தை மற்றும் இறைச்சிக் கடைகள் அமைத்தல், காங்கேசன்துறை மத்தி வேலைத்திட்டத்திற்கான முதலாவது பகுதிக் கொடுப்பனவு | Rs 2,351,952.00 |

❖ கௌரவ உறுப்பினர்களான சிவபாலசுந்தரம் ஹரிகரன், கெங்காசுதன் பிரதீபன் ஆகியோர் காலை 09.51 மணிக்கு வருகை தந்தனர்.

**தீர்மான இல: 01/17.02.2022**

| இல | பெயர் | விபரம் | தொகை |
|---|---|---|---|
| 01 | World Construction, Mavady, Moolai Road, Vaddukoddai | சபைநிதி 2021 மூலம் மேற்கொள்ளப்பட்ட Reconstruction of Nakkanawaththai Road- Alaveddy West வேலைக்கான முதலாவதும் இறுதியுமான கொடுப்பனவு | Rs 2,188,080.00 |
| 02 | World Construction, Mavady, Moolai Road, Vaddukoddai | சபைநிதி 2021 மூலம் மேற்கொள்ளப்பட்ட Renovation of Savakkalai Veethy- Seenthippantal Ilavalai North வேலைக்கான முதலாவதும் இறுதியுமான கொடுப்பனவு | Rs 1,708,250.00 |
| 03 | Vigadar Civil Contractor, Manikkam Vairavar Kovilady, Chulipuram East, Chulipuram | சபைநிதி (அபிவிருத்தி ஒதுக்கம்) மூலம் மேற்கொள்ளப்பட்ட Reconstruction of Thenmayilai Cross Road வேலைக்கான முதலாவதும் இறுதியுமான கொடுப்பனவு | Rs 1,100,000.00 |
| 04 | Nami Construction, Dutch Road, Meesalai West, Chavakachcheri | சபைநிதி (அபிவிருத்தி ஒதுக்கம்) மூலம் மேற்கொள்ளப்பட்ட Reconstruction of Alayaveethy Cross Lane, Kankesanthurai வேலைக்கான முதலாவதும் இறுதியுமான கொடுப்பனவு | Rs 1,589,844.00 |
| 05 | Athy Myliddy Community Center, Athy Myliddy, Kankesanthurai | சபைநிதி (அபிவிருத்தி ஒதுக்கம்) மூலம் மேற்கொள்ளப்பட்ட Reconstruction of Poothavarajar Kovil Veethy வேலைக்கான முதலாவதும் இறுதியுமான கொடுப்பனவு | Rs 408,555.80 |
| 06 | பன்னாலை கணேசா சனசமூக நிலையம், தெல்லிப்பளை | PSDG-2021 மூலம் மேற்கொள்ளப்பட்ட Keerimalai Kerny St IV வேலைக்கான கொடுப்பனவு | Rs 2,075,275.00 |
| 07 | வித்தகன் சனசமூக நிலையம், தெல்லிப்பளை | PSDG-2021 மூலம் மேற்கொள்ளப்பட்ட Keerimalai Kerny St II வேலைக்கான கொடுப்பனவை முற்பணமாக வழங்கல் | Rs 1,114,618.67 |
| 08 | Namagal Community Center, Namagal Road, Thellippalai. | சபைநிதி மூலம் மேற்கொள்ளப்பட்ட Reconstruction of Vellavaikkal Veethy, Thanthaiselvapuram வேலைக்கான முதலாவதும் இறுதியுமான கொடுப்பனவு | Rs 136,000.00 |
| 09 | SP Engineering, Vaddu South, Vaddukoddai. | சபைநிதி 2021 மூலம் மேற்கொள்ளப்பட்ட Reconstruction of Mulavai Cross Road, Myliddy வேலைக்கான முதலாவதும் இறுதியுமான கொடுப்பனவு | Rs 1,202,660.00 |
| 10 | Abans PLC, Chunnakam | LG 18BTU Air Conditioner கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 193,990.00 |
| 11 | Selva Electricals, Palaly Rd, Thirunelvely | மயிலிட்டி உப அலுவலகத்திற்கு இலத்திரனியல் பொருட்கள் கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 186,188.00 |
| 12 | RK Electricals, KKS Road, Mallakam | Bulb, Sensor கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 212,000.00 |
| 13 | Jana Civil Work, Imayanan, Uduppiddy | பிரதேச அபிவிருத்தி உதவித்திட்டத்தின் கீழ் 2021 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும் சந்தை மற்றும் இறைச்சிக் கடைகள் அமைத்தல், காங்கேசன்துறை மத்தி வேலைத்திட்டத்திற்கான முதலாவது பகுதிக் கொடுப்பனவு | Rs 2,351,952.00 |

மேற்படி கொடுப்பனவுகளை வழங்குவதற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் பொன்னுத்துரை தங்கராசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் பாக்கியநாதர் மரியதாஸ் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

❖ கௌரவ உறுப்பினர் சுபத்திரா ஜெயசீலன் அவர்கள் காலை 09.55 மணிக்கு வருகை தந்தார்.

➢ Village Development Programme-2022 வேலைத்திட்டத்திற்கான நிதியான ரூபா 32.1Mn இற்கு மேலதிகமாக தெல்லிப்பளை பிரதேச செயலாளரின் DS/VN/PL/V/DWV/GEN-II இலக்க 07.02.2022 திகதிய கடிதம் மூலம் வலிகாமம் வடக்கு பிரதேச சபையினால்

நடைமுறைப்படுத்தவுள்ள கட்டுமான மற்றும் புனரமைப்பு வேலைகளுக்காக ரூபா 6.00Mn ஒதுக்கீடு செய்யப்பட்டு வேலைத்திட்டங்களும் முன்மொழியப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேற்படி வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு சபையின் தழுவு அனுமதிக்கு கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

| | G.N division | Allocation |
|---|---|---|
| Reconstruction of Agriculture Road-Appukkuddi Veethy,Sethupillai Veethy(300M) | J/244 | 1.0Mn |
| Reconstruction of Agriculture Road-Thunnanthai Veethy(300M) | J/244 | 1.0Mn |
| Reconstruction of Agriculture Road - Puliyady Veethy 200m | J/253 | 1.0Mn |
| Reconstruction of Drainage System from Arokkiya Maatha Church to Palaly North PreSchool | J/254 | 3.0Mn |

**தீர்மான இல :- 02/17.02.2022**

Village Development Programme-2022 வேலைத்திட்டத்திற்கான நிதியான ரூபா 32.1Mn இற்கு மேலதிகமாக தெல்லிப்பளை பிரதேச செயலாளரின் DS/VN/PL/V/DWV/GEN-II இலக்க 07.02.2022 திகதிய கடிதம் மூலம் வலிகாமம் வடக்கு பிரதேச சபையினால் நடைமுறைப்படுத்தவுள்ள கட்டுமான மற்றும் புனரமைப்பு வேலைகளுக்காக ரூபா 6.00Mn ஒதுக்கீடு செய்யப்பட்டு வேலைத்திட்டங்களும் முன்மொழியப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேற்படி வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு கௌரவ உறுப்பினர் கந்தசாமி மயூரதன் முன்மொழிய கௌரவ உறுப்பினர் பாக்கியநாதது மரியதாஸ் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

| | G.N division | Allocation |
|---|---|---|
| Reconstruction of Agriculture Road-Appukkuddi Veethy,Sethupillai Veethy(300M) | J/244 | 1.0Mn |
| Reconstruction of Agriculture Road-Thunnanthai Veethy(300M) | J/244 | 1.0Mn |
| Reconstruction of Agriculture Road - Puliyady Veethy 200m | J/253 | 1.0Mn |
| Reconstruction of Drainage System from Arokkiya Maatha Church to Palaly North PreSchool | J/254 | 3.0Mn |

❖ கௌரவ உறுப்பினர்களான செல்வகுமாரன் விஜயராஜ், மரியதாசன் யோசெப் இதயராஜ் ஆகியோர் காலை 10.05 மணிக்கு வருகை தந்தனர்.

➢ எமது சபையில் காலங்கடந்த நிலையில் காணப்படும் ஆவணங்களினை அழிப்பதற்கு அழிப்பு சபைக்கு சபை உறுப்பினர்கள் இருவரையும் பின்வரும் உத்தியோகத்தர்களையும் நியமித்து காலங்கடந்த ஆவணங்களினை அழிப்பதற்கு சபையின் அனுமதிக்கு கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

தலைவர் – கௌரவ தவிசாளர் சோ.சுகிர்தன்
உறுப்பினர்கள்
திரு.இ.பகீரதன் - செயலாளர்
திரு.தி.தியாகச்சந்திரன்- பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்
திரு.இ.சுகர்ணன் - தொழில்நுட்ப உத்தியோகத்தர்
திரு.நா.குமணன் – உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர்
கௌரவ உறுப்பினர்
கௌரவ உறுப்பினர்

**தீர்மான இல :- 03/17.02.2022**

எமது சபையில் காலங்கடந்த நிலையில் காணப்படும் ஆவணங்களினை அழிப்பதற்கு அழிப்பு சபைக்கு பின்வரும் சபை உறுப்பினர்கள், உத்தியோகத்தர்களை நியமித்து காலங்கடந்த ஆவணங்களினை அழிப்பதற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் சின்னத்தம்பி ஜெயரத்தினம் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் ஐயாத்துரை மயூரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

தலைவர் – கௌரவ தவிசாளர் சோ.சுகிர்தன்
உறுப்பினர்கள்
திரு.இ.பகீரதன் - செயலாளர்
திரு.தி.தியாகச்சந்திரன்- பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்
திரு.இ.சுகர்ணன் - தொழில்நுட்ப உத்தியோகத்தர்
திரு.நா.குமணன் – உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர்
கௌரவ உறுப்பினர் சண்முகவடிவேல் செல்லகாந்தன்
கௌரவ உறுப்பினர் கந்தசாமி மயூரதன்

❖ கௌரவ உறுப்பினர் சண்முகலிங்கம் சஜீவன் அவர்கள் காலை 10.11 மணிக்கு வருகை தந்தார்.

➢ சபையின் பாவனையிலுள்ள NP ZA 5195 ஆம் இலக்க Backhoe Loader வாகனத்தினை Avansmart Pvt Ltd நிறுவனம், அனுராதபுரத்திற்கு அனுப்பி வாகனத்தினை முழுமையாக பரிசீலனை செய்து முழுமையான திருத்தங்களினை செய்வதற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

**தீர்மான இல :- 04/17.02.2022**
சபையின் பாவனையிலுள்ள NP ZA 5195 ஆம் இலக்க Backhoe Loader வாகனத்தினை Avansmart Pvt Ltd நிறுவனம், அனுராதபுரத்திற்கு அனுப்பி வாகனத்தினை முழுமையாக பரிசீலனை செய்து முழுமையான திருத்தங்களினை செய்வதற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் பாக்கியநாதர் மரியதாஸ் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் டானியேல் அந்தோனிப்பிள்ளை அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

➢ 2021 ஆம் ஆண்டிற்கான இரண்டாம் கணிப்பீட்டுச்சபைக்கு சபையின் உறுப்பினர் ஒருவரினையும் பின்வரும் உத்தியோகத்தர்களினையும் உள்ளடக்கி இரண்டாம் கணிப்பீட்டு சபையினை நியமிக்க சபையின் அனுமதிக்கு கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.
- பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக உத்தியோகத்தர் ஒருவர்
- திரு.இ.சுகர்ணன் - தொழில்நுட்ப உத்தியோகத்தர்
- சபை உறுப்பினர் -

**தீர்மான இல :- 05/17.02.2022**
2021 ஆம் ஆண்டிற்கான இரண்டாம் கணிப்பீட்டுச்சபைக்கு பின்வரும் சபை உறுப்பினரையும், உத்தியோகத்தர்களையும் உள்ளடக்கி இரண்டாம் கணிப்பீட்டு சபையினை நியமிக்க அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் சின்னத்தம்பி ஜெயரத்தினம் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் பொன்னுத்துரை தங்கராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக உத்தியோகத்தர் ஒருவர்
- திரு.இ.சுகர்ணன் - தொழில்நுட்ப உத்தியோகத்தர்
- கௌரவ உறுப்பினர் சுப்பிரமணியம் சர்வேஸ்வரன்

❖ கௌரவ உறுப்பினர் கைலைவாசன் சீதாராமன் அவர்கள் காலை 10.30 மணிக்கு வருகை தந்தார்.

➢ சபையின் பாவனையிலுள்ள NP PF 7745 ஆம் இலக்க வாகனத்திற்கு நான்கு ரயர்கள் ரூபா 107,600.00 இற்கு கொள்வனவு செய்தமைக்கான சபையின் தழுவு அனுமதிக்காக கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

**தீர்மான இல :- 06/17.02.2022**
சபையின் பாவனையிலுள்ள NP PF 7745 ஆம் இலக்க வாகனத்திற்கு நான்கு ரயர்கள் ரூபா 107,600.00 இற்கு கொள்வனவு செய்தமைக்கான தழுவு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் கந்தசாமி மயூரதன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் பொன்னுத்துரை தங்கராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

❖ கௌரவ உறுப்பினர் பொன்னம்பலம் ஆதவன் அவர்கள் காலை 10.35 மணிக்கு வருகை தந்தார்.

➢ பிரதேச அபிவிருத்தி உதவித்திட்டத்தின் (LDSP) Performance Tranche இன் கீழ் முதல் கட்டமாக ஒதுக்கப்பட்டுள்ள நிதியினைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படவுள்ள Improvement of facilities for citizen in front offices with equipment and improved systems in Myliddy and Mallakam Sub offices வேலைத்திட்டத்தினை சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தரின் சிபாரிசுக்கமைய சனசமூக நிலையத்துடன் ஒப்பந்தம் மேற்கொண்டு நடைமுறைப்படுத்துவதற்கு சபையின் அனுமதிக்கு கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

**தீர்மான இல :- 07/17.02.2022**
பிரதேச அபிவிருத்தி உதவித்திட்டத்தின் (LDSP) Performance Tranche இன் கீழ் முதல் கட்டமாக ஒதுக்கப்பட்டுள்ள நிதியினைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படவுள்ள Improvement of facilities for

citizen in front offices with equipment and improved systems in Myliddy and Mallakam Sub offices வேலைத்திட்டத்தினை சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தரின் சிபாரிசுக்கமைய சனசமூக நிலையத்துடன் ஒப்பந்தம் மேற்கொண்டு நடைமுறைப்படுத்துவதற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் டானியேல் அந்தோனிப்பிள்ளை அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் பசுபதி யோகராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- பிரதேச அபிவிருத்தி உதவித்திட்டத்தின் (LDSP) Performance Tranche இன் கீழ் முதல் கட்டமாக ஒதுக்கப்பட்டுள்ள நிதியினைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படவிருந்த Purchasing equipment for Compost Yard வேலைத்திட்டத்தினூடாக கொள்வனவு செய்யப்படவிருந்த இயந்திரங்கள் விவசாய திணைக்களத்தினால் எமது சபைக்கு வழங்கப்பட்டமையினால் குறித்த வேலைத்திட்டத்திற்கு மாற்றீடாக Construction of building for water and sanitary facilities at compost yard வேலைத்திட்டத்தினை மேற்கொள்ளவும் குறித்த வேலையினை சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தரின் சிபாரிசுக்கமைய சனசமூக நிலையத்துடன் ஒப்பந்தம் மேற்கொண்டு நடைமுறைப்படுத்துவதற்கும் சபையின் அனுமதிக்கு கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

**தீர்மான இல :- 08/17.02.2022**

பிரதேச அபிவிருத்தி உதவித்திட்டத்தின் (LDSP) Performance Tranche இன் கீழ் முதல் கட்டமாக ஒதுக்கப்பட்டுள்ள நிதியினைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படவிருந்த Purchasing equipment for Compost Yard வேலைத்திட்டத்தினூடாக கொள்வனவு செய்யப்படவிருந்த இயந்திரங்கள் விவசாய திணைக்களத்தினால் எமது சபைக்கு வழங்கப்பட்டமையினால் குறித்த வேலைத்திட்டத்திற்கு மாற்றீடாக Construction of building for water and sanitary facilities at compost yard வேலைத்திட்டத்தினை மேற்கொள்ளவும் குறித்த வேலையினை சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தரின் சிபாரிசுக்கமைய சனசமூக நிலையத்துடன் ஒப்பந்தம் மேற்கொண்டு நடைமுறைப்படுத்துவதற்கும் அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் டானியேல் அந்தோனிப்பிள்ளை அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் கந்தசாமி மயூரதன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

  - கௌரவ உறுப்பினர் செல்வகுமாரன் விஜயராஜ் அவர்கள் கௌரவ தவிசாளரின் அனுமதியை பெற்று காலை 10.45 மணிக்கு கூட்டத்திலிருந்து வெளியேறினார்.

- பிரதேச அபிவிருத்தி உதவித்திட்டத்தின் (LDSP) Performance Tranche இன் கீழ் இரண்டாவது கட்டமாக ஒதுக்கப்பட்டுள்ள ரூபா 7.95Mn நிதியினைப் பயன்படுத்தி தற்போது அமைக்கப்பட்டுவரும் சேதனப் பசளை உற்பத்தி நிலையத்திற்கு பயன்படுத்தும் வீதியான Reconstruction of Thayiddipulam Road (VC Lane 2nd Right Lane) (Partly) வேலைத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு சபையின் அனுமதிக்கு கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

**தீர்மான இல :- 09/17.02.2022**

பிரதேச அபிவிருத்தி உதவித்திட்டத்தின் (LDSP) Performance Tranche இன் கீழ் இரண்டாவது கட்டமாக ஒதுக்கப்பட்டுள்ள ரூபா 7.95Mn நிதியினைப் பயன்படுத்தி தற்போது அமைக்கப்பட்டுவரும் சேதனப் பசளை உற்பத்தி நிலையத்திற்கு பயன்படுத்தும் வீதியான Reconstruction of Thayiddipulam Road (VC Lane 2nd Right Lane) (Partly) வேலைத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் பசுபதி யோகராசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் கந்தசாமி மயூரதன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- உள்ளூர் அபிவிருத்தி உதவித்திட்டத்தினால் ஒதுக்கீடு செய்யப்படவுள்ள 4,5 ஆம் கட்ட நிதியின் கீழ் அளவெட்டி பொதுநூலகம் அமைத்தல் வேலைத்திட்டத்தினை மேற்கொள்வதற்கு சபையின் அனுமதிக்கு கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

**தீர்மான இல :- 10/17.02.2022**

உள்ளூர் அபிவிருத்தி உதவித்திட்டத்தினால் ஒதுக்கீடு செய்யப்படவுள்ள 4,5 ஆம் கட்ட நிதியின் கீழ் அளவெட்டி பொதுநூலகம் அமைத்தல் வேலைத்திட்டத்தினை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் கந்தசாமி மயூரதன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் பொன்னுத்துரை தங்கராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- பிரதேச அபிவிருத்தி உதவித்திட்டத்தின் (LDSP) Performance Tranche இன் கீழ் முதல் கட்டமாக ஒதுக்கப்பட்டுள்ள நிதியினைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படுகின்ற கொள்வனவு வேலைத்திட்டங்களுக்கான பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ள சபையின் அனுமதிக்கு கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

| S. | Proposed Sub-Project | Key Activity | Budget (Mn) |
|---|---|---|---|
| 1 | Purchasing of Equipments and furniture for Alaveddy public library | Purchasing of smart board<br>Purchasing of Computers | 1,000,000.00 |
| 2 | Purchasing of necessary equipment for already constructed building but not in operational | Purchasing of tables<br>Purchasing of chairs | 1,000,000.00 |
| 3 | Purchasing educational books and publications to cater current school curriculam for Public Libraries | Purchasing of books | 250,000.00 |
| 4 | Purchasing furnitre for enhancing facilities for reading and managing books in libraries. | Purchasing of Cupboards | 250,000.00 |
| Total | | | 2,500,000.00 |

**தீர்மான இல :- 11/17.02.2022**

பிரதேச அபிவிருத்தி உதவித்திட்டத்தின் (LDSP) Performance Tranche இன் கீழ் முதல் கட்டமாக ஒதுக்கப்பட்டுள்ள நிதியினைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படுகின்ற கொள்வனவு வேலைத்திட்டங்களுக்கான பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் கந்தையா ஜினதாஸ் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் பசுபதி யோகராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

| S. | Proposed Sub-Project | Key Activity | Budget (Mn) |
|---|---|---|---|
| 1 | Purchasing of Equipments and furniture for Alaveddy public library | Purchasing of smart board<br>Purchasing of Computers | 1,000,000.00 |
| 2 | Purchasing of necessary equipment for already constructed building but not in operational | Purchasing of tables<br>Purchasing of chairs | 1,000,000.00 |
| 3 | Purchasing educational books and publications to cater current school curriculam for Public Libraries | Purchasing of books | 250,000.00 |
| 4 | Purchasing furnitre for enhancing facilities for reading and managing books in libraries. | Purchasing of Cupboards | 250,000.00 |
| Total | | | 2,500,000.00 |

- சபை நிதி மூலம் மேற்கொள்ளப்படும் கீழ் வரும் வேலைகளுக்கான மதிப்பீடு (ரூபா 13,903,619.48) தயாரிக்கப்பட்டுள்ளது. குறிப்பிடப்பட்ட வேலைகளினை சபைநிதி - 2022 மூலம் மேற்கொள்வதற்கும், குறிப்பிட்ட வேலைகளினை பகிரங்க கேள்வி கோரல் மூலம் மேற்கொண்டு நடைமுறைப்படுத்துவதற்கும் சபையின் அனுமதிக்கு கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

| இல | வேலைத் திட்டம் | மதிப்பீட்டுத் தொகை | கிராம அலுவலர் பிரிவு இலக்கம் | வட்டார இலக்கம் |
|---|---|---|---|---|
| 01 | Renovation of Mallakam Mill Lane -1st left Site By Lane | 576,000.00 | J/213 | Ward -20 |
| 02 | Renovation of Ponnippulam Road – 3 rd Left By Lane | 1,326,000.00 | J/215 | Ward -12 |
| 03 | Renovation of Alukkai Road - 5 th Right Lane - Alaveddy | 1,119,000.00 | J/217 | Ward -18 |
| 04 | Renovation of Chankanai Vallai Road 9 th By Lane ( Nariyiddan) -Mallakam | 431,000.00 | J/212 | Ward -21 |
| 05 | Renovation of Appachchippillai Road By Lane - Alaveddy | 2,764,000.00 | J/219 | Ward -19 |
| 06 | Construction Airport Front Road at Myliddy | 1,214,265.10 | J/246 | Ward -05 |
| 07 | Construction of Palaly North Housing Scheme Road | 2,335,747.20 | J/254 | Ward -07 |
| 08 | Construction of Maanaviral Road (Valvaipulam Road) at Palaly | 1,197,258.40 | J/253 | Ward -08 |
| 09 | Construction of Thampuliyaakadavai Road at Kurumpasiddy | 1,236,298.80 | J/242 | Ward -16 |
| 10 | Reconstruction of Saampuvil Vairavar Kovil Road | 1,704,049.98 | J/250 | Ward -04 |

**தீர்மான இல :- 12/17.02.2022**

சபை நிதி மூலம் மேற்கொள்ளப்படும் கீழ் வரும் வேலைகளுக்கான மதிப்பீடு (ரூபா 13,903,619.48) தயாரிக்கப்பட்டுள்ளது. குறிப்பிடப்பட்ட வேலைகளினை சபைநிதி - 2022 மூலம் மேற்கொள்வதற்கும், குறிப்பிட்ட வேலைகளினை பகிரங்க கேள்வி கோரல் மூலம் மேற்கொண்டு நடைமுறைப்படுத்துவதற்கும் அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் பசுபதி யோகராசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் கந்தசாமி மயூரதன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

| இல | வேலைத் திட்டம் | மதிப்பீட்டுத் தொகை | கிராம அலுவலர் பிரிவு இலக்கம் | வட்டார இலக்கம் |
|---|---|---|---|---|
| 01 | Renovation of Mallakam Mill Lane -1st left Site By Lane | 576,000.00 | J/213 | Ward -20 |
| 02 | Renovation of Ponnippulam Road – 3 rd Left By Lane | 1,326,000.00 | J/215 | Ward -12 |
| 03 | Renovation of Alukkai Road - 5 th Right Lane - Alaveddy | 1,119,000.00 | J/217 | Ward -18 |
| 04 | Renovation of Chankanai Vallai Road 9 th By Lane ( Nariyiddan) -Mallakam | 431,000.00 | J/212 | Ward -21 |
| 05 | Renovation of Appachchippillai Road By Lane - Alaveddy | 2,764,000.00 | J/219 | Ward -19 |
| 06 | Construction Airport Front Road at Myliddy | 1,214,265.10 | J/246 | Ward -05 |
| 07 | Construction of Palaly North Housing Scheme Road | 2,335,747.20 | J/254 | Ward -07 |
| 08 | Construction of Maanaviral Road (Valvaipulam Road) at Palaly | 1,197,258.40 | J/253 | Ward -08 |
| 09 | Construction of Thampuliyaakadavai Road at Kurumpasiddy | 1,236,298.80 | J/242 | Ward -16 |
| 10 | Reconstruction of Saampuvil Vairavar Kovil Road | 1,704,049.98 | J/250 | Ward -04 |

- கீழ் வரும் வேலைகளுக்கான மதிப்பீடு (ரூபா 15,714,564.20) தயாரிக்கப்பட்டுள்ளது. குறிப்பிடப்பட்ட வேலைகளினை சபை நிதி மூலம் (அபிவிருத்தி ஒதுக்கம்) மேற்கொள்வதற்கும், குறிப்பிட்ட வேலைகளினை பகிரங்க கேள்வி கோரல் மூலம் மேற்கொண்டு நடைமுறைப்படுத்துவதற்கும் சபையின் அனுமதிக்கு கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

| இல | வேலைத் திட்டம் | மதிப்பீட்டுத் தொகை | கிராம அலுவலர் பிரிவு இலக்கம் |
|---|---|---|---|
| 01 | Construction of Boundary Wall - Myliddy Hindu Cemetery | 1,700,000.00 | J/251 |
| 02 | Construction of Boundary Wall – Palaly South Hindu Cemetery | 1,600,000.00 | J/252 |
| 03 | Construction of Boundary Wall – Head Office Vehicle Park | 1,400,000.00 | J/223 |
| 04 | Construction of Retaining Wall – Keerimalai Kerny | 1,851,528.80 | J/226 |
| 05 | Renovation of Mahaathma Road – 10 th Right Lane | 551,000.00 | J/216 |
| 06 | Renovation of Soda Company Road & Soda Company Road 3 rd Right Lane | 1,126,000.00 | J/214 |
| 07 | Reconstruction of Sodacompany 2nd Right Lane , 1st Right Lane | 1,010,000.00 | J/229 |
| 08 | Reconstruction of Saloon Road & Saloon Road 1st Right Lane | 1,856,000.10 | J/232 |
| 09 | Reconstruction of 8 th Mile Post Lane 2nd Right Lane , 1 st Left Lane | 950,000.00 | J/229 |
| 10 | Reconstruction of Vigneswara Road – 2 nd Left Lane | 875,969.60 | J/250 |
| 11 | Construction of Thanneerthalvu Vairavar Kovil Veethy (Balance Work) - Kurumpasiddy | 2,264,134.00 | J/238 |
| 12 | Construction of Kuruman Anikkai Road | 529,931.70 | J/239 |

**தீர்மான இல :- 13/17.02.2022**

கீழ் வரும் வேலைகளுக்கான மதிப்பீடு (ரூபா 15,714,564.20) தயாரிக்கப்பட்டுள்ளது. குறிப்பிடப்பட்ட வேலைகளினை சபை நிதி மூலம் (அபிவிருத்தி ஒதுக்கம்) மேற்கொள்வதற்கும், குறிப்பிட்ட வேலைகளினை பகிரங்க கேள்வி கோரல் மூலம் மேற்கொண்டு நடைமுறைப்படுத்துவதற்கும் அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் பாக்கியநாதர் மரியதாஸ் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் பசுபதி யோகராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

| இல | வேலைத் திட்டம் | மதிப்பீட்டுத் தொகை | கிராம அலுவலர் பிரிவு இலக்கம் |
|---|---|---|---|
| 01 | Construction of Boundary Wall - Myliddy Hindu Cemetery | 1,700,000.00 | J/251 |
| 02 | Construction of Boundary Wall – Palaly South Hindu Cemetery | 1,600,000.00 | J/252 |
| 03 | Construction of Boundary Wall – Head Office Vehicle Park | 1,400,000.00 | J/223 |
| 04 | Construction of Retaining Wall – Keerimalai Kerny | 1,851,528.80 | J/226 |
| 05 | Renovation of Mahaathma Road – 10 th Right Lane | 551,000.00 | J/216 |
| 06 | Renovation of Soda Company Road & Soda Company Road 3 rd Right Lane | 1,126,000.00 | J/214 |
| 07 | Reconstruction of Sodacompany 2nd Right Lane , 1st Right Lane | 1,010,000.00 | J/229 |
| 08 | Reconstruction of Saloon Road & Saloon Road 1st Right Lane | 1,856,000.10 | J/232 |
| 09 | Reconstruction of 8 th Mile Post Lane 2nd Right Lane , 1 st Left Lane | 950,000.00 | J/229 |
| 10 | Reconstruction of Vigneswara Road – 2 nd Left Lane | 875,969.60 | J/250 |
| 11 | Construction of Thanneerthalvu Vairavar Kovil Veethy (Balance Work) - Kurumpasiddy | 2,264,134.00 | J/238 |
| 12 | Construction of Kuruman Anikkai Road | 529,931.70 | J/239 |

- சுற்றுலாப்பயணிகளின் வருகையின் போது கீரிமலையில் இரவு நேர காவற்கடமையில் ஈடுபடுவதற்காக இரவுநேர காவலாளி ஒருவரை வெளிவாரி அடிப்படையில் நியமிப்பதற்கு அனுமதிக்கு கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

**தீர்மான இல :- 14/17.02.2022**
சுற்றுலாப்பயணிகளின் வருகையின் போது கீரிமலையில் இரவு நேர காவற்கடமையில் ஈடுபடுவதற்காக இரவுநேர காவலாளி ஒருவரை வெளிவாரி அடிப்படையில் நியமிப்பதற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் இராசரத்தினம் ஸ்ரீதாமோதரராசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் கந்தசாமி மயூரதன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- ❖ கௌரவ உறுப்பினர் சேனாதிராசா கலையமுதன் அவர்கள் கீரிமலை ஒரு புனிதப்பிரதேசமாகும். ஆனால் சிலர் அநாகரிகமான உடைகளுடன் வருகை தருவதாகவும் முறைப்பாடு தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். மதுபானப்பாவனை, புகைப்பிடித்தல் தடை செய்யப்படல் வேண்டும். மேலும் கீரிமலையில் வாகனத்தரிப்பிட கட்டணம் அறவிடப்படுகின்ற போதும் வாகனங்கள் தரிப்பிடத்தில் நிறுத்தப்படுவதில்லை. வாகனங்கள் நிறுத்தத்தடை எனும் அறிவுறுத்தல் காட்சிப்படுத்தப்படல் வேண்டும் எனத் தெரிவித்தார்.
- ❖ கௌரவ உறுப்பினர் சிவகுமாரன் செந்தூரன் அவர்கள் வாகனத்தரிப்பிடத்தில் வாகனத்தை நிறுத்தாதவர்களிடம் தண்டப்பணம் அறவிட முடியும் எனத் தெரிவித்தார்.
- ❖ கௌரவ உறுப்பினர் மேரி ஆன் சகாயராணி அவர்கள் கீரிமலை புனிதப்பிரதேசமாக இருப்பதனால் வெளி மாவட்டத்தை சேர்ந்தவர்களும் சுற்றுலாப்பயணிகளும் வருகை தருகின்றனர். கீரிமலை அந்தியேட்டி மட சுற்றாடல் துப்பரவின்றி காணப்படுகின்றமையை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.
- ❖ கௌரவ உறுப்பினர் கெங்காசுதன் பிரதீபன் அவர்கள் கீரிமலையில் அந்தியேட்டி செய்ய வருபவர்கள் சாம்பல் கரைப்பதற்கு மயானத்திற்கு அருகில் இடம் ஒழுங்குபடுத்த வேண்டும் எனத் தெரிவித்தார்.
- ❖ கௌரவ உறுப்பினர் சேனாதிராசா கலையமுதன் அவர்கள் மக்களுக்கான அறிவுறுத்தல் பலகைகள் அதிகளவான இடங்களில் காட்சிப்படுத்தப்படல் வேண்டும் எனத் தெரிவித்தார்.
- ❖ கௌரவ தவிசாளர் அவர்கள் மக்களுக்கான அறிவுறுத்தல் பலகைகள் ஏற்கனவே காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. மக்களும் பொறுப்புடன் செயற்பட வேண்டியது அவசியம். அந்தியேட்டி மடம் தற்போது அமைந்துள்ள இடம் பொருத்தமற்றதாக காணப்படுகின்றது. அதனை மயானத்திற்கு அருகில் மாற்ற வேண்டும். கீரிமலையின் அபிவிருத்தி செயற்பாடுகள் தொடர்பாக நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் கலந்துரையாடப்பட்டுள்ளது. தற்போது கீரிமலையில் கடமையாற்றும் எமது சபையின் தொழிலாளிகளுக்கு அவர்களை அடையாளப்படுத்துவதற்கு Jacket வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

- ➢ பிரதேச அபிவிருத்தி உதவித்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற சேதனப்பசளை உற்பத்தி நிலையம் அமைத்தல் - சீராவளை வேலைத்திட்டத்திற்கான முதலாவது பகுதிக் கொடுப்பனவு ரூபா 3,753,003.98 இனை ஒப்பந்தகாரரருக்கு (Phase One Engineering) வழங்குவதற்கு சபையின் அனுமதிக்கு கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

**தீர்மான இல :- 15/17.02.2022**
பிரதேச அபிவிருத்தி உதவித்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற சேதனப்பசளை உற்பத்தி நிலையம் அமைத்தல் - சீராவளை வேலைத்திட்டத்திற்கான முதலாவது பகுதிக் கொடுப்பனவு ரூபா 3,753,003.98 இனை ஒப்பந்தகாரரருக்கு (Phase One Engineering) வழங்குவதற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் இராசரத்தினம் ஸ்ரீதாமோதரராசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் பசுபதி யோகராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- ➢ தலைமையலுவலக முன் நிலப்பரப்பிற்கு கல்பதிப்பதற்கான (Improvement of Interlock paving at Headoffice) Sabha வேலைத்திட்டத்திற்கு ரூபா 1,690,000.00 இற்கான மதிப்பீட்டில் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தரின் சிபாரிசுக்கமைய வித்தகன் சனசமூக நிலையத்துடன் ஒப்பந்தம் மேற்கொண்டு நடைமுறைப்படுத்துவதற்கு சபையின் அனுமதிக்கு கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

**தீர்மான இல :- 16/17.02.2022**
தலைமையலுவலக முன் நிலப்பரப்பிற்கு கல்பதிப்பதற்கான (Improvement of Interlock paving at Headoffice) Sabha வேலைத்திட்டத்திற்கு ரூபா 1,690,000.00 இற்கான மதிப்பீட்டில் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தரின் சிபாரிசுக்கமைய வித்தகன் சனசமூக நிலையத்துடன் ஒப்பந்தம்

மேற்கொண்டு நடைமுறைப்படுத்துவதற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் பாக்கியநாதர் மரியதாஸ் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் கந்தசாமி மயூரதன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- அடுத்து 20.01.2022 ஆம் திகதி நடைபெற்ற வீடமைப்பு சமூக அபிவிருத்திக் குழுக் கூட்ட அறிக்கை சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது. இதில் பின்வரும் விடயங்கள் ஆராயப்பட்டன.
    - தற்போது பொருட்களின் விலைவாசி அதிகரித்துச் செல்வதால் வீட்டுத்திட்டத்திற்கு வழங்கப்படும் நிதி புதிய வீடு ஒன்றை அமைக்க போதாமல் உள்ளமையால் வீட்டுத்திட்டத்திற்கு வழங்கப்படும் நிதியினளவை அதிகரிக்க வேண்டும்.
    - வீட்டுத்திட்ட தெரிவுக்குழுவில் பிரதேச சபை உறுப்பினர்கள் கலந்து கொள்வது அவசியம்.
    - வீட்டுத்திட்ட பயனாளிகள் பட்டியலை வட்டார உறுப்பினர்களுடன் கலந்துரையாடி தயாரிக்க வேண்டும்.

- கௌரவ தவிசாளர் அவர்கள் தற்போது கட்டடப் பொருட்களின் விலைவாசியும் அதிகரித்து செல்கின்றது எனத் தெரிவித்தார்.
- கௌரவ உறுப்பினர் டானியேல் அந்தோனிப்பிள்ளை அவர்கள் வீட்டுத்திட்ட நிதி அதிகரிக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

இவ்விடயம் பரிசீலிக்கப்பட்டு பின்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மான இல :- 17/17.02.2022**

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தற்போது மீள்குடியேற்றம் நடைபெற்று வருகின்றது. மீள்குடியேறிய பொதுமக்களுக்கு வீட்டுத்திட்டங்களுக்கான நிதியாக ரூபா 600,000.00, ரூபா 1,000,000.00 தொகைகளே வழங்கப்பட்டு வருகின்றது. தற்போது நாட்டில் பொருட்களின் விலைகள் உயர்வடைந்துள்ளமையால் வீடு அமைக்க குறித்த வீட்டுத்திட்ட நிதி போதாமல் உள்ளமையை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. எனவே 2023 ஆம் ஆண்டிற்கான தேசிய வரவுசெலவுத்திட்டத்தில் வீட்டுத்திட்டத்திற்கான நிதியை ரூபா 1,500,000.00 ஆக ஒதுக்கீடு செய்ய வேண்டும் என நிதி அமைச்சர் கௌரவ பசில் ராஜபக்ஷ அவர்களுக்கு கடித மூலம் தெரியப்படுத்த வேண்டும் என கௌரவ உறுப்பினர் கைலைவாசன் சீதாராமன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் கந்தசாமி மயூரதன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- அடுத்து 08.02.2022 ஆம் திகதி நடைபெற்ற பெண்கள் சிறுவர் பாதுகாப்புக் குழுக் கூட்ட அறிக்கை சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது. இதில் பின்வரும் விடயங்கள் ஆராயப்பட்டன.
    - LDSP திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படவிருக்கும் செயல்திறன் மதிப்பீடு தொடர்பாக உள்ளூராட்சி உதவியாளர் அவர்களால் கருத்துரை வழங்கப்பட்டது.
    - பெண்களை தலைமைத்துவமாக கொண்ட குடும்பங்கள், மாற்றுத்திறனாளிகள், அடிப்படை கல்வி பெறுவதில் கவனமற்ற சிறுவர்கள் மற்றும் வேலைவாய்பற்ற இளைஞர், யுவதிகள் பெயர் விபரங்களினை கிராம சேவையாளரின் உதவியுடன் பட்டியல்படுத்த வேண்டும்.

- கௌரவ தவிசாளர் அவர்கள் தற்போது நியமிக்கப்பட்ட வட்டார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பொதுமக்களின் தகவல்களை திரட்டி வருகின்றனர். அத்தகவல்கள் மூலம் பொருத்தமானவர்களை இனங்காண கூடியதாக இருக்கும் எனத் தெரிவித்தார்.
- கௌரவ உறுப்பினர் இராசரத்தினம் ஸ்ரீதாமோதரராசா அவர்கள் வாழ்வாதார உதவிகள் பொருத்தமானவர்களுக்கு வழங்கப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.
- கௌரவ உறுப்பினர் எட்மன் தயாவதி அவர்கள் வட்டார உறுப்பினர்கள் தமது பிரதேசத்தில் உதவி தேவைப்படுபவர்களின் விபரங்களை வழங்கலாம் எனத் தெரிவித்தார்.

- அடுத்து 11.02.2022 ஆம் திகதி நடைபெற்ற தொழில்நுட்ப சேவைக் குழுக் கூட்ட அறிக்கை சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது. இதில் பின்வரும் விடயங்கள் ஆராயப்பட்டன.
    - வட்டார உறுப்பினர்கள் தங்கள் வட்டாரத்திற்குரிய வீதி வேலைகளை பார்வையிட வேண்டும்.
    - சபையால் மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

- கௌரவ தவிசாளர் அவர்கள் வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் எழில்மிகு கிராமமும் வளமான வாழ்வும் செயற்திட்டத்திற்கு அமைய வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான 2.94Km நீளமுடைய மாவிட்டபுரம், கீரிமலை வீதியை

தூய்மைப்படுத்தல், பாதசாரிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல் மற்றும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துதல் போன்றவற்றிற்காக எமது சபையினால் பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுத்துச் செல்ல தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய

- மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வாசகங்களை அப்பகுதிகளில் காட்சிப்படுத்தல்.
- வீதியோரங்களில் இருமருங்கிலும் காணப்படுகின்ற பற்றைகளை வெட்டுதல்.
- துண்டுப்பிரசுரங்களை வழங்கல்.
- சிரமதானப்பணியில் அப்பகுதி மக்களை பங்குபற்றச் செய்தல்.
- பதாகைகளை காட்சிப்படுத்தல்.

இச்செயற்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு எதிர்வரும் 20.02.2022 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு கீரிமலையில் ஆரம்பிக்கப்படவுள்ளது. அதில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு தெரிவித்தார்.

➢ வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் 01.01.2021 தொடக்கம் 31.12.2021 வரையான இறுதிக்கணக்கில் மொத்த மீண்டுவரும் வருமானம் ரூபா 153,964,611.63 ஆகவும் மொத்த மூலதனப் பெறுகை ரூபா 55,856,254.06 ஆகவும் மொத்த மீண்டுவரும் செலவீனம் ரூபா 95,067,765.20 ஆகவும் மொத்த மூலதன செலவினம் 87,893,966.91 ரூபா ஆகவும் அபிவிருத்தி ஒதுக்கம் ரூபா 25,843,426.00 ஆகவும் கொண்டு தயாரிக்கப்பட்ட 2021 ஆம் ஆண்டிற்கான இறுதிக்கணக்கறிக்கை சபையின் அனுமதிக்காக கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

**தீர்மான இல: 18/17.02.2021**
வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் 01.01.2021 தொடக்கம் 31.12.2021 வரையான இறுதிக்கணக்கில் மொத்த மீண்டுவரும் வருமானம் ரூபா 153,964,611.63 ஆகவும் மொத்த மூலதனப் பெறுகை ரூபா 55,856,254.06 ஆகவும் மொத்த மீண்டுவரும் செலவீனம் ரூபா 95,067,765.20 ஆகவும் மொத்த மூலதன செலவினம் 87,893,966.91 ரூபா ஆகவும் அபிவிருத்தி ஒதுக்கம் ரூபா 25,843,426.00 ஆகவும் கொண்டு தயாரிக்கப்பட்ட 2021 ஆம் ஆண்டிற்கான இறுதிக்கணக்கறிக்கையினை ஏற்று அங்கீகாரம் வழங்க அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் பாக்கியநாதர் மரியதாஸ் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் எட்மன் தயாவதி அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

▪ அடுத்து 2022 ஆம் ஆண்டுக்கான ஜனவரி மாதத்திற்கான கணக்கறிக்கை கௌரவ தவிசாளர் அவர்களால் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திற்கான கணக்கறிக்கை சரியென கௌரவ உறுப்பினர் டானியேல் அந்தோனிப்பிள்ளை அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் பொன்னுத்துரை தங்கராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

❖ கௌரவ உறுப்பினர்களான பொன்னம்பலம் ஆதவன், இராசரத்தினம் ஸ்ரீதாமோதரராசா ஆகியோர் கௌரவ தவிசாளரின் அனுமதியை பெற்று காலை 11.55 மணிக்கு கூட்டத்திலிருந்து வெளியேறினர்.

➢ அடுத்து ஏனைய விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

❖ கௌரவ தவிசாளர் அவர்கள் தையிட்டியில் அமைக்கப்பட்டு வருகின்ற விகாரையின் திறப்பு விழாவிற்கு கௌரவ பிரதம மந்திரி அவர்கள் யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளதாக அறிய முடிகின்றது. குறித்த விகாரையை சூழவுள்ள பொதுமக்களின் காணிகள் விடுவிக்கப்பட வேண்டியது அவசியம் எனத் தெரிவித்தார்.
❖ கௌரவ உறுப்பினர் சண்முகலிங்கம் சஜீவன் அவர்கள் குறித்த விகாரை தனியார் காணியில் பிரதேச சபையின் கட்டட அனுமதி பெறப்படாமல் அமைக்கப்படுவதனால் குறித்த கட்டட நிர்மாணப்பணிகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.
❖ கௌரவ தவிசாளர் அவர்கள் குறித்த விகாரைக்கான கட்டட அனுமதி நகர அபிவிருத்தி அதிகார சபையினால் வழங்கப்பட்டுள்ளது. குறித்த காணி உரிமையாளரிடம் தொடர்பு கொள்ள முடியாமல் உள்ளது எனத் தெரிவித்தார்.
❖ கௌரவ உறுப்பினர் சண்முகலிங்கம் சஜீவன் அவர்கள் குறித்த விகாரைக்கான கட்டட அனுமதி நகர அபிவிருத்தி அதிகார சபையினால் வழங்கப்பட்டுள்ளதா என நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு கடிதம் அனுப்பி விபரத்தை பெற்று சபைக்கு தெரியப்படுத்த வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

இவ்விடயம் பரிசீலிக்கப்பட்டு பின்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மான இல :- 19/17.02.2022**
தையிட்டியில் அமைக்கப்பட்டு வருகின்ற விகாரையின் திறப்பு விழாவிற்கு கௌரவ பிரதம மந்திரி அவர்கள் யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளமையால் அதற்கு முன்னர் தையிட்டியில் அமைக்கப்பட்டு வருகின்ற விகாரையை சுற்றியுள்ள பொதுமக்களின் காணிகளை விடுவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கௌரவ பிரதம மந்திரி அவர்களுக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்த வேண்டும் என கௌரவ உறுப்பினர் ஐயாத்துரை மயூரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் கெங்காசுதன் பிரதீபன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- ❖ கௌரவ உறுப்பினர் மார்க்கண்டு மகாதேவா அவர்கள் ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவுகளுக்கும் ரூபா 3.0Mn நிதிக்கான வேலைத்திட்டங்களின் தெரிவு தொடர்பாக கிராம அலுவலர் பிரிவுகளில் இடம்பெற்ற கூட்டங்களுக்கு பிரதேச சபை உறுப்பினர்களுக்கு அறிவித்தல் வழங்கப்படவில்லை. எனது வட்டாரத்தில் இரு கிராம சேவையாளர் பிரிவுகளில் ஒரு கிராம சேவையாளர் பிரிவுக்கு அறிவித்தல் வழங்கப்பட்டது. மற்றைய கிராம சேவையாளர் பிரிவில் அறிவித்தல் வழங்கப்படவில்லை எனத் தெரிவித்தார்.
- ❖ கௌரவ தவிசாளர் அவர்கள் இது தொடர்பாக உத்தியோகத்தர்களுக்கு தெளிவான அறிவுறுத்தல் வழங்கப்படவில்லை. ஏனைய மாவட்டங்களில் குறித்த கூட்டங்களுக்கு பிரதேச சபை உறுப்பினர்கள் அழைக்கப்பட்டனர் எனத் தெரிவித்தார்.
- ❖ கௌரவ உறுப்பினர் சண்முகலிங்கம் சஜீவன் அவர்கள் மாவட்ட செயலாளர், பிரதேச செயலாளர், கிராம சேவையாளர் ஆகியோருக்கு பிரதேச ரீதியான அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் தொடர்பான கூட்டங்களுக்கு பிரதேச சபை உறுப்பினர்களுக்கு அறிவிக்க வேண்டியது அவசியம் என கடித மூலம் தெரியப்படுத்த வேண்டும் எனத் தெரிவித்தார்.

இவ்விடயம் பரிசீலிக்கப்பட்டு பின்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மான இல :- 20/17.02.2022**
மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம்,பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் என்பன யாழ் மாவட்டத்தில் நீண்ட காலமாக நடைபெறவில்லை. ஏனைய மாவட்டங்களில் இக்கூட்டங்கள் நடைபெற்று வருகின்றமையை அவதானிக்க கூடியதாக உள்ளது. ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்திற்கமைவாக ஒதுக்கீடு செய்யப்பட்ட ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவுகளுக்கும் ரூபா 3.0Mn மற்றும் உள்ளூராட்சி பிரிவுகளுக்கு ரூபா 4.0Mn நிதிகளுக்கான வேலைத்திட்டங்கள் தொடர்பான தெளிவின்மை காணப்படுகின்றது. மேலும் 2021 ஆம் ஆண்டில் கிராமிய வீதிகள் புனரமைத்தல் திட்டத்தின் கீழான சில வீதிகள் இதுவரை புனரமைக்கப்படவில்லை. எனவே இவை தொடர்பாக கலந்துரையாடுவதற்கு மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம், பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் என்பன யாழ் மாவட்டத்தில் நடாத்தப்பட வேண்டும் என கௌரவ உறுப்பினர் பொன்னுத்துரை தங்கராசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் கந்தசாமி மயூரதன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- ▪ இத் தீர்மானத்தை யாழ், மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர் கௌரவ அங்கஜன் இராமநாதன், கௌரவ ஆளுநர், மாவட்ட செயலாளர் ஆகியோருக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்த வேண்டும் என சபையால் தீர்மானிக்கப்பட்டது.

- ❖ கௌரவ தவிசாளர் அவர்கள் புதிதாக நியமிக்கப்பட்ட வட்டார அபிவிருத்தி உத்தியோகத்தர்களை சபையின் கௌரவ உறுப்பினர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

இத்துடன் கூட்டமானது காலை 12.07 மணிக்கு இனிதே நிறைவு பெற்றது.

ஒப்பம்: இ.பகீரதன்
செயலாளர்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை.

ஒப்பம்: சோ.சுகிர்தன்
தவிசாளர்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை.

உண்மைப்பிரதியென உறுதிப்படுத்துகின்றேன்.

திரு. இராமலிங்கம் பகீரதன்,
செயலாளர்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை
காங்கேசன்துறை.